<u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

MCOP No.50/2019 Date: 14.12.2023.

PW1-சுகுமாறன்

<u>சாட்சி மீண்டும் முன்னிலையானதின் பேரில் 4 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

விபத்தின் போது என் மகனின் வயது 28 என்றும், அவர் வங்கியில் துணை மேலாளராக பணியாற்றி மாதம் ரூ.44 ஆயிரம் சம்பளம் வாங்கியதாக சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. விபத்தின் போது என் மகன் இருசக்கர வாகனத்தை ஓட்டி சென்றார் என்றால் சரிதான். என் மகன் வாகனத்திற்கு முன்பாக தான் லாரி சென்று கொண்டிருந்தது என்றால் சரிதான். லாரியின் பின்பக்கத்தில் தான் என் மகன் மோதி விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். ஆனால் லாரி ஓட்டுநர் தான் திடீர் என்று பிரேக் பிடித்ததால் தான் விபத்து ஏற்பட்டது. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்திற்கு யாருடைய கவனகுறைவு காரணம் என்று எனக்கு நேரடையாக தெரியாது. என் மகன் தான் அதிவேகமாக சென்று லாரியின் பின்பக்கத்தில் மோதி விபத்து ஏற்படுத்தினார் என்றால் சரியல்ல. என் மகன் கவனமாக வாகனம் ஓட்டி இருந்தால் விபத்து தவிர்க்கப்பட்டிருக்கும் என்றால் சரியல்ல. விபத்திற்கு என் மகனின் கவனகுறைவு காரணம் என்பதால் அவர் தான் தனக்கு தீங்கு இளைத்து கொண்டார் என்றால் சரியல்ல. விபத்தில் என் மகனுக்கு தலைக்காயம் ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்தின் போது தலைகவசம் அணிந்து சென்றிருந்தால் என் மகனுக்கு தலைக்காயம் ஏற்பட வாய்ப்பு இல்லை என்றால் சரியல்ல. அவர் தலைகவசம் அணிந்திருந்தார். 1 ம் எதிர்மனுதாரருக்கு விபத்தின் போது ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் 4 ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. என் மகனுக்கு திருமணம் ஆகவில்லை. என் மனைவி தற்போது உயிருடன் இல்லை. எனக்கு தற்போது வயது 70. மனு தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

Sd/-சுகுமாறன்

Sd/-திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.